RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

DOI: 10.54392/ijot2532

# The Worship of Pudavai Kari Amman in the Kongu Region – A study

**R. Yuvaraj [a,*], A. Senthamarai [a]**

[a] Department of Tamil, Erode Arts and Science College, Rangampalayam, Erode, Tamil Nadu, India
*Corresponding author Email: r.ambalathuarasu@gmail.com
DOI: https://doi.org/10.54392/ijot2532
Received: 30-04-2025; Revised: 16-07-2025; Accepted: 26-07-2025; Published: 13-08-2025

**Abstract:** Tamil worship various deities seeking prosperity and well-being in their lives. We cannot alter the wonders of nature such as the five elements, the sun, the moon, the stars, mountains, rivers, rain, thunder, lightning, and drought. Man, who sought to cultivate the land by clearing forests, feared that the immeasurable natural forces surrounding him would cause harm to himself, his crops, and his livestock. To strengthen his fearful mind and to appease nature so that it would not harm him, he began to worship. In Tamil Nadu, particularly in the Kongu region, the worship of deceased ancestors holds a prominent place in folk religious traditions. This ancestor worship is based on both love and fear. The hero-stone worship mentioned in the Sangam period, although primarily a worship of valor, is also a form of ancestor worship. Among these deity worship practices, we will examine the worship of Pudavai Kari Amman, who is celebrated as a family deity in the fertile Kongu region.

**Keywords:** Pudavai Kari Amman, Tamil worship, Religious Traditions, Kongu region

---

# கொங்கு மண்டலத்தில் புடவைக் காரியம்மன் வழிபாடு - ஓர் ஆய்வு

**இரா. யுவராஜ் [அ *], ஆ.செந்தாமரை [அ]**

[அ] தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ரங்கம்பாளையம், ஈரோடு, இந்தியா

## முன்னுரை

பஞ்சபூதங்கள், சூரியன், சந்திரன், விண்மீன்கள், மலைகள், நதிகள், மழை, இடி, மின்னல், வறண்ட பருவங்கள் முதலிய இயற்கையின் புதுமைகளை நம்மால் மாற்ற இயலாது. காடுகளை திருத்தி உழவு செய்து பயன்அடைய நினைக்கும் மனிதன், தன்னைச் சூழந்துள்ள, அளவிட இயலாத இயற்கைச் சக்திகளால் தனக்கும், தனது பயிhகளுக்கும், கால்நடைகளுக்கும் தீங்கு ஏற்படுமெனப் பயந்தான். இவ்வாறு பயமடைந்த தன் மனத்தை திடமடையச் செய்யவும், தன்னைச் சூழ்ந்துள்ள இயற்கை மகிழ்வு கொண்டு தனக்குத் தீங்கிழைக்காதிருக்க உதவி செய்யுமாறும் வழிபாடு செய்யத் தொடங்கினான். அத்தெய்வ வழிபாடுகளுள் கொங்கு வள நாட்டில் குலதெய்வமாகக் கொண்டாடப்படும் புடவைக்காரியம்மன் வழிபாடு குறித்து இங்கு ஆய்வோம்.

## குலதெய்வம் - வழிபாடு

மனிதன் தனக்குப் புறம்பாக உள்ள சக்திகளைத் தெய்வமாக கொண்டாடத் தொடங்கிய வரலாறு இவ்வாறு இயற்கை சீற்றங்களால் ஆகும். அவ்வண்ணம், மனிதனின் அச்சமும், நன்றியறிதலுமே வழிபாட்டின் காரணங்களாக அமைகின்றது என்று செ. அன்னகாமு கூறுகின்றார். (Annakamu, 1959).

தமிழர்கள் தம் வாழ்வில் வளமும், நலமும் வேண்டி பல்வேறு வகையான தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர். நாட்டுப்புறத் தெய்வங்களை ஆறுவகைகளாக பிரிக்கின்றார், டாக்டர் துளசி. ராமசாமி (Thulasi Ramasamy, 1985)

 10.54392/ijot2532

1. ஊர்த் தெய்வங்கள்
2. இனத் தெய்வங்கள்
3. குலத் தெய்வங்கள்
4. மாலைத் தெய்வங்கள்
5. சமாதித் தெய்வங்கள்
6. துணைத் தெய்வங்கள்

தமிழ்நாட்டில் குறிப்பாக, கொங்கு நாட்டில் வழிபடப்படும் நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளில் பெரிதும் இடம் பெறுவது இறந்துபட்ட முன்னோர்களின் வழிபாடே ஆகும். இம்முன்னோர் வழிபாடு அன்பின் அடிப்படையிலும், அச்சத்தின் அடிப்படையிலும் வழிபடுவதாகும்.

சங்ககாலத்தில் குறிக்கப்படும் நடுகல் வழிபாடுமே, வீரத்தைப் பாராட்டும் வீர வழிபாடு என்றாலும் ஒரு வகையில் முன்னோர் வழிபாடே ஆகும்.

பண்டைத் தமிழர்கள் சிறந்த வீரர்கள் நினைவாக, எடுக்கப்பட்ட கற்களை அல்லாமல் பிற தெய்வங்களை வழிபடமாட்டோம் என்று மக்கள் கொண்டிருந்த எண்ணத்தைப் பதிவு செய்கிறது, புறநானூறு.

“ஒன்னாத் தெவ்வர் முன்நின்று விலங்கி

ஒளிறு ஏந்து மருப்பின் களிறெறிந்து வீழ்ந்தென

கல்லெ பரவின் அல்லது

நெல் உகுத்துப்பரவும் கடவுளும் இலவே” (Puliyur Kesikan, 2010)

கொங்கு நாட்டு நாட்டுப்புற வழிபாட்டில் இடம்பெறும் குடும்பத்தெய்வம், குலதெய்வம், காவல்தெய்வம், ஊர்ப்பொது தெய்வம், போன்ற அனைத்திலும் இறந்துபட்ட முன்னோரை வழிபடும் தன்மை காணப்படுகின்றன. ஆவி வடிவில் வாழும் முன்னோர்களும், குலத்தலைவர்களும், தமக்கு நன்மை செய்வார்கள் என்று புராதன மக்கள் நம்பினர் (Gnanashekaran, 2002).

கிராமப்புறங்களில் பெண் தெய்வ வழிபாடே பெரும்பாலும் காணப்படுகின்றது. தாய்த் தெய்வத்தைத் தாயாகவும், கன்னியாகவும், உருவகப்படுத்திக் கூறுவது மிகப் பழங்காலத்தில் இருந்தே மரபாக உள்ளுது. உலக நாடுகளிலும் பெண் தெய்வ வழிபாடே முன்நிற்பதாக டாக்டர் சு. சண்முகசுந்தரம் குறிப்பிடுகிறார் (Sanmuga Sundaram, 2001).

## புடவைக்காரியம்மன் வழிபாட்டின் வரலாறு

மக்களால் வழிபடப்படும் பெண் தெய்வங்களில், நெசவுத்தொழிலை முதன்மையாகக் கொண்ட செங்குந்த இனமக்களின் குல தெய்வமான புடவைக்காரியம்மன் வழிபாடு முதன்மை பெறுகின்றது. கொங்கு மண்டலத்தில், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள, உலகப்பம் பாளையம், எளையாம்பாளையம், காரிச்சாம்பாளையம், மண்டகப்பாளையம், தண்ணீhப்பந்தல் பாளையம் ஆகிய ஊர்களிலும், சேலம் மாவட்டத்தில் உள்ள தாரமங்கலம், அம்மாபேட்டை ஆகிய ஊர்களிலும் புடவைக்காரியம்மனை குலதெய்வமாக வழிபடும் கோயில்கள் உள்ளன.

நெசவுத்தொழிலை, முதன்மையாகக் கொண்ட செங்குந்த இன மக்களுக்கு தொண்டைநாட்டு காஞ்சிபுரமே பூர்வீகமாகும். பிறகு பல்வேறு காரணங்களுக்காக, பல்வேறு பகுதிகளுக்கு பிரிந்து சென்ற இவ்வின மக்கள், காஞ்சிபுரத்தின் கண்கண்ட தெய்வமான காமாட்சி அம்மனின் நினைவாக புது வண்ணப் புடவையை உடன் எடுத்துச் சென்றனர்.

வெளியூருக்குச் செல்வதற்கு முன் காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயிலுக்குச் சென்று, புது வண்ணப் புடவையை அம்மனிடம் வைத்து வழிபட்டனர். பிறகு அப்புடவையில் காமாட்சி அம்மனின் அருள்நிறைந்துள்ளதாக நம்பிக்கைக் கொண்டு ஊருக்கு எடுத்துச் சென்றனர்.

ஆற்றலற்ற ஒரு பொருளை அதீத ஆற்றல் இருப்பதாக நம்பி அதனை வழிபடுபது புனிதப் பொருள் வழிபாடு என்று தே. ஞானசேகரன் குறிப்பிடுகிறார் (Gnanashekaran, 2002). அவ்வண்ணம் புனிதப் பொருள் வழிபாடாக, காஞ்சிபுரம் காமாட்சி அம்மனின் அருள் நிறைந்த புதுவண்ணப் புடவையை தங்கள் வீடுகளில் பனைவோலைப் பேழையிலும் (பெட்டியிலும்) மண்பானையிலும் வைத்து பாதுகாத்துப் போற்றி வழிபட்டனர். இதுவே புடவைக்காரியம்மன் வழிபாடாக உருபெற்றது.

பின்னர், குடும்பமும் மக்கள் தொகையும் பல்கிப்பெருகிய போதும் குறிப்பிட்ட ஒரு வீட்டில் தொடர்ந்து புடவைக்காரியம்மன் வழிபாடு நடைபெற்று வந்தது. அமாவாசை, பௌர்ணமி, பிறந்த நாள், திருமணநாள் போன்ற விசேடநாட்களில் 'சாமி வீடு' என்று அழைக்கப்படும், தங்கள் முன்னோர் வழிபட்ட வீட்டுக்குச் சென்று, "புடவைக்காரி அம்மனை" வழிபட்டனர்.

## புடவை படைத்தல் வழிபாடு

முன்னோர்கள் வாழ்ந்த சாமி வீட்டில், குல தெய்வமாக புடவைக்காரி அம்மனை வழிபடுகின்ற வழக்கம் கொங்கு நாடெங்கும் பரவியது.

அவ்வாறு வழிபடப்படும் புடவையில் பழுது ஏற்பட்டால் தெய்வம் கனவில் தோன்றி குறிப்பு அருளும். அதன்படி, பெரியவர்கள் ஒன்று கூடி புடவையை பேழை அல்லது பானையில் இருந்து எடுத்துப் பார்த்து உறுதிசெய்வர். பின்னர், புடவை நெய்பவர் வீட்டிற்குச் சென்று குறிப்பிட்ட நாளில் புடவை வேண்டும் என்று வெற்றிலைப் பாக்குடன் பணம் வைத்துக் கொடுப்பர்.

புதுப்புடவையை நெய்பவரும், விரதம் இருந்து பயபக்தியோடு வேலையை முடிப்பர். பின்னர், குறிப்பிட்ட பௌர்ணமி நாளில் புடவை வைத்து வழிபடும் திருவிழா நடைபெறும். அந்நாளில், புதுப்புடவையை நீர் நிலைக்கு எடுத்துச் சென்று தூய்மைப்படுத்தி, உலர்த்தி கோயிலுக்கு எடுத்து வருவர்.

பின்னர், அலங்கரிக்கப்பட்ட புனிதமான இடத்தில் புடவையை வைத்து பூமாலைகள் சூட்டி, இலையில் உணவு வகைகளை படைத்து வழிபாடு நடத்துவர். பிறகு, புடவையை ஒரு மஞ்சள் துணியில் சுற்றி பேழை அல்லது பானையில் வைத்து விடுவர். பழுதுபட்ட புடவையை நீர்நிலைகளில் விட்டுவிடுவர்.

## சுவாமி செய்யும் பெருவிழா

புடவைக்காரியம்மனை குல தெய்வமாக வழிபடும் மக்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை 'சுவாமி செய்யும் பெருவிழாவை' வெகுசிறப்பாக கொண்டாடுகின்றனர். வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய் என ஐந்து நாட்கள் இவ்விழா நடைபெறுகின்றது.

மாசி மாதம் பௌர்ணமியும், மகம் நட்சத்திரமும் கூடிய காலத்தில் இவ்விழா நடைபெறுகின்றது. தைப்பூச நன்னாளில் சுவாமி செய்யும் பெருவிழாவிற்கான பந்தக்கால் நடுதல், மஞ்சள் முடிதல் போன்ற முன்னேற்பாடுகளை புடவைக்காரியம்மனை வழிபட்டு தொடங்குவர். அழைப்பிதழ்கள் அச்சிட்டு பங்காளிகள், உறவினர்கள், நண்பர்கள் என அனைத்து தரப்பினருக்கும் வழங்குவர். புத்தாடைகளை வாங்குவர். தங்கள் வீட்டில் பிறந்த பெண்களுக்கு புடவைகளைக் கொடுப்பர்.

காஞ்சிபுரம் காமாட்சியம்மனுக்கு திருவிழா நடைபெறும், மாசி மாதத்தில் 'சுவாமி செய்யும் பெருவிழா' கொண்டாடப்படுவது தனிச்சிறப்பாகும். முதல் நாள் வெள்ளிக்கிழமை அன்று காலையில் பிள்ளையார் பூசையுடன் தொடங்குவர். மாலையில் புற்று உள்ள இடத்தை தூய்மைப்படுத்தி பொங்கல் வைத்து வழிபாடு நடத்துவர். இரண்டாம் நாளில் முன்னர் குறிப்பிட்ட புடவை வைத்து பூசை செய்யும் திருவிழா நடைபெறும்.

மூன்றாம் நாள் ஞாயிறு அன்று ஊர்ப்பொதுவில் உள்ள பாவடியில், தூய்மை செய்யப்பட்ட புற்றுமண் கொண்டு வந்து சேர்ப்பர். பிறகு, மிகப்பெரிய அளவில் புடவைக்காரி அம்மனை

பெரியாண்டிச்சி அம்மனாக களிமண்ணில் அமைப்பர். விபூதி, மஞ்சள், குங்குமம், வண்ணப் பொடிகள் ஆகியவற்றால் பெரியாண்டிச்சி அம்மனை அழகு செய்வர்.

அன்று மாலையில், கண் திறப்பு பூசை நடைபெறும். தொடர்ந்து கோயிலில் இருந்து பூசைப் பொருட்களை புனிதமான கூடையில் வைத்து, பூசகரின் மனைவியின் தலையில் வைத்து பாவடிக்கு வருவர். அப்போது, பம்பை, மேளம், நாதஸ்வரம், கொம்பு, மணி, தாளம் உள்ளிட்ட பல்வேறு இசைக்கருவிகளை இசைத்துக் கொண்டு வருவர். பலரும் அருள்வந்து ஆடுவர்.

பூசைக்கூடை பாவடியை அடைந்து உடன் பெரியாண்டிச்சி அம்மனுக்கு புத்தாடை அணிவித்து, பிரம்மாண்ட மாலைகள் சூட்டி, பொங்கலிட்டு வழிபாடு நடத்துவர். பெரியாண்டிச்சி அம்மன் சக்தியின் வடிவமாக இருந்து சிவபெருமானை பூசை செய்வதாக நம்பப்படுகிறது. அதன் பொருட்டே, பெரியாண்டிச்சி அம்மனின் திருக்கையிலும், சுற்றிலும் 108 சிவலிங்கங்கள் அமைக்கப்பட்டு சிறப்பு பூசைகள் நடைபெறும்.

நான்காம் நாளில், 'வாசல் பொங்கல் வைத்தல்' வழிபாடு நடைபெறும். கோயில் வாசலில் தூய்மை செய்து, பரிவார தெய்வங்களை நிலைநிறுத்தி, மாலைகள் சூட்டி, வழிபாடு நடத்துவர். நிறைவு நாளான செவ்வாய் அன்று, பெண்கள் மட்டுமே கலந்து கொள்ளும் 'மொகுட்டு நாச்சி வழிபாடு' எனப்படும் சண்டிகேஸ்வரர் வழபாடு நடக்கும். அன்று பொங்கலிட்டு கீரைவகைகளை சமைத்து படையலிட்டு அனைவருக்கும் வழங்குவர். ஐந்து நாட்களும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் வழங்குவர். இதற்கான செலவுகளை கோயிலுக்குப் பாத்தியப்பட்ட பங்காளிகள் நன்கொடையாக வழங்குவர். இந்நாட்களில் கரகாட்டம், ஒயிலாட்டம் போன்ற கலைநிகழ்சிளும் நடத்துவர்.

## தைப்பூசத் திருவிழா

புடவைக்காரி அம்மனை வழிபடும் கோயில்களில் மாதந்தோறும் அமாவாசை, பௌர்ணமி நாட்களில் சிறப்பு பூசைகள் நடைபெறும். ஆண்டுதோறும் தைப்பூச நாளில், புனித தீர்த்தம் கொண்டு வந்து, புடவைக்காரி அம்மனுக்கு அரிசி மாவில் விளக்கிட்டு, காய்கறிகள் கூடிய உணவினை படையலிட்டு சிறப்பு பூசைகள் நடத்துவர். பிறகு அனைவருக்கும் அன்னதானம் வழங்குவர்.

## நம்பிக்கைகள்

- புடவைக்காரி அம்மனை சக்தியாகவும், பெரியாண்டவரை சிவமாகவும் கருதி வழிபடுகின்றனர். மேலும் தங்கள் குலத்தின் முன்னவராகவும் போற்றுகின்றனர்.
- தங்கள் வாழ்வில், என்ன பிரச்சனை ஏற்பட்டாலும், வீட்டில் இருந்தவாறே புடவைக்காரி அம்மனை வேண்டிக் கொண்டு மஞ்சள் துணியில் பணத்தை முடித்து வைப்பர்;. அம்மன் அருளால் பிரச்சனைகள் தீர்ந்த உடன் மஞ்சள் முடிப்பினை கோயிலில் கொண்டு வந்து சேர்ப்பர்.
- அமாவாசை நாட்களில் பச்சரிசிமாவில் விளக்கிட்டு, தேங்காய் பழம் வைத்து வழிபட்டால் குடும்பம் செழிக்கும் என்பதை பெரிதும் நம்பி தவறாமல் கடைபிடிக்கின்றனர்.
- குழந்தை பிறந்து 11 மாதங்கள் கடந்த உடன் புடவைக்காரி அம்மன் கோயிலுக்கு வந்து முடிக்காணிக்கை வழங்குகின்றனர். பல்வேறு வேண்டுதலுக்கும் முடிக்காணிக்கை வழங்குவதை வழக்கமாகக் கொண்டு உள்ளனர்.
- பெரும்பாலான புடவைக்காரி அம்மன் கோயில்களில் பலியிடுதல் நடைபெறுவது இல்லை. சில கோயில்களில் பலியிட்டு வழிபாடு நடத்துகின்றனர்.

## முடிவுரை

**புடவைக்காரி அம்மனை வழிபட்டால் தங்கள் குலம் செழிக்கும் என்று நம்பிக்கை கொண்டனர். விசேடநாட்களில் முடிக்காணிக்கை கொடுத்தல், மாவிளக்குப் போடுதல் போன்ற சடங்குகளையும் பயபக்தியோடு நிறைவேற்றி வருகின்றனர். "புனிதப்பொருள் வழிபாட்டின் நீட்சியாகவே புடவைக்காரி அம்மன் வழிபாடு அமைந்துள்ளது என்பதை இவ்வாய்வுக் கட்டுரையின் வாயிலகாக அறியலாம்.**

## References


Puliyur Kesikan (2010) Purananuru Moolamum Uraiyum, Saradha Publications, Chennai.

S. Annakamu (1959) Eattil Elutha Kavithaikal, Gandhigram, Sarvodaya Prasarialayam, Thanjavur, India

S. Sanmuga Sundaram (2001) Kongu Nattupuraviyal, Kavya Publications, Bangalore.

T. Gnanashekaran (2002) Kongu Nattupura Deiva Valipadu, Arivagam, Bharathiar University, Coimbatore, India

Thulasi Ramasamy (1985) Nellai Mavatta Nattupura Deivangal, International Institute of Tamil Studies, Chennai, India


### Conflict of interest

The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

### About the License

© The Author(s) 2025. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

### Cite this Article

R. Yuvaraj, A. Senthamarai, The Worship of Pudavaikariyamman in the Kongu Region – A study, Indian Journal of Tamil, 6(3), (2024) 5-9. https://doi.org/10.54392/ijot2532